மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 587/2023 |
| பெயர் | : | செல்வராஜ் (PW2) |
| த/பெ | : | சிதம்பரம் |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | |

(A1 Prabakaran @ Gnanaraj A2 Chandrasekar are present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11 th day of March 2025.

<u>முதல் விசாரணை</u>

1)நான் பச்சைபெருமாள்புரத்தில் வசிக்கிறேன்.நான் கூலி வேலை செய்கிறேன்.அசா1 சரஸ்வதி என் மனைவி.சாட்சி வன்னியபெருமாளை தெரியும்.அவர் என் பக்கத்து வீட்டுக்காரர்.ஆஜர் எதிரிகளை தெரியும், அவர்கள் என் பக்கத்து வீட்டுக்காரர்கள்.

2)எதிரிகளுக்கும் எங்களுக்கும் சொத்து பிரச்சனை இருந்தது.4,5 வருடங்களுக்கு முன்பாக மாதம் சரியாக நினைவில் இல்லை 14 ஆம் தேதி மதியம் 3.30 மணிக்கு மேல் நானும் என் மனைவியும் வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் அங்கு வந்து 1வது எதிரி என்னை கம்பு வைத்து மூக்கிலும், முதுகிலும் என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார். என் மனைவி அதை தடுக்க வந்தபோது 1 வது எதிரி என் மனைவியை கீழே தள்ளிவிட்டு அவரது தலை முடியை சுற்றி தள்ளிவிட்டார்.அதன்பின்னார் 2 வது எதிரி கல்லை கொண்டு எறிந்தார்.அது என் மீது படவில்லை பட்டிருந்தால் நான் செத்து இருப்பேன்.எதிரிகள் வெட்டிவிடுவேன் , குத்திவிடுவேன் என்று மிரட்டினார்கள்.அதனால் நான் பயந்து கொண்டு ஒரு மாதம் நாகர்கோவில் சென்று தங்கினோம்.சம்பவம் நடந்தவுடன் ஓட்டப்பிடாரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்று ஊசிபோட்டுவிட்டு ஓட்டப்பிடாரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

3)என்னிடம் காட்டப்படும் புகார்மனு என் மனைவி கொடுத்ததுதான் அதில் நான் அறிவேன் சாட்சி கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1)சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று நேராக காவல்நிலையம் சென்றுவிட்டு மருத்துவமனைக்கு சென்றோம்.காவல்நிலையத்தில் மருத்துவமனைக்கு சென்ற சிகிச்சை எடுக்குமாறு தெரிவித்தார்கள்.காவல்நிலையத்திற்கு நானும் என் மனைவியும் சேர்ந்து தான் சென்றோம்.அப்போது புகார் மனு கொடுக்கவில்லை.நான் மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் மருத்துவமனைக்கு வந்தார்கள்.அங்கு வைத்து போலிசார் என்னிடம் எதுவும் கேட்டு எழுதிக்கொள்ளவில்லை.

2)புகார் மனுவை எழுதியது யார் என்றால் ஓட்டப்பிடாரத்தை சேர்ந்தவர் அவர் பெயர் தெரியாது.புகார் மனுவில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரமும் எத்தனை பக்கம் எழுதியிருந்தார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல நான் சொன்னதை தான் எழுதினார்கள் ,நான் படித்த பார்த்தபின்னர் தான் காவல்நிலையத்தில் சென்று கொடுத்தேன்.ஒரு பக்கம் முடிந்து மறுபக்கம் பாதி வரை எழுதினார்கள்.எனக்கு எழுத படிக்க தெரியும்.ஆஜர் எதிரிகள் இருவரும் என் உறவினர்கள்.சம்பவத்திற்கு முன்பாக நான் எதிரிகள் மீது பத்து முறையாவது புகார் கொடுத்திருப்பேனா என்றால் ஐந்து முறை கொடுத்திருப்பேன். அதில் நான்கு புகார் நான் கொடுத்தேன்.ஒரு புகார் எங்கள் வீட்டு பெண்கள் கொடுத்தார்கள்.

3)என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் நான் அடிக்கடி ஊருக்கு வரமாட்டேன் என்றால் சரியல்ல அடிக்கடி வருவேன்.எங்கள் எதிர் வீட்டில் இருக்கும் ஜேசுமணி மீது அவர் குடியிருக்கும் வீடு எனக்கு பாத்தியப்பட்டது என்று உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றால் நாங்கள் வழக்கு கொடுத்த சர்வே எண்ணும் அவர் குடியிருக்கும் சர்வே எண்ணும் வெவ்றேனாது என்று தீர்ப்பானது அதற்கு நான் மேல் முறையீடு செய்து அதில் எனக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது.

4)எங்கள் வீட்டு அருகில் உள்ள புளியமர தோப்பு எனக்கு பாத்தியப்பட்டது என்று உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றால் வழக்கு தாக்கல் செய்து எனக்கு ஆதரவாக

மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பாகி உள்ளது.வழக்கு தாக்கல் செய்தது துாத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.

5)நான் என் ஊரைச் சுற்றியுள்ள இடங்கள் அனைத்தும் எனக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்து அது எனக்கு எதிராக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல.அதே போல் எதிரிகள் மீதும் பொய்யாக புகார் கொடுத்து அவர்கள் உரிமையியல் வழக்கில் எங்களுக்கு ஆதரவாக செயல்படவேண்டும் என்பதற்காக என் மனைவி மூலமாக பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.எதிரிகள் நான் சொன்ன விதத்தில் என்னிடம் சண்டை போடவில்லை என்றாலும் எதிரிகள் என் மனைவியை தாக்கவில்லை என்றாலும் சரியல்ல.நான் சொன்ன நேரத்தில் நான் சொன்ன விதத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டிருந்தால் அதை எழுதியவரை பற்றி தெரிந்திருக்கும் என்றாலும் சரியல்ல.எதிரிகள் மீது நான் பொய்யாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.நான் ஊரில் உள்ள அனைவரிடமும் சண்டைபோட்டுவிட்டு ஊரில் தங்காமல் வெளியூருக்கு சென்றுவிடுவேன் என்றால் சரியல்ல.எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.